**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை:–திருமதி.பி.ரிஸானா பர்வீன், M.L., MHRM.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை
2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7–ம் நாள் வியாழன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் கார்த்திகை மாதம் 27 ம் நாள்)
**<u>அசல் வழக்கு எண். 128/2019</u>**

செ. முருகானந்தம் ...... வாதி

//எதிராக//

1. நா. சாமி வீரப்பா
2. குமரகுருபரன் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 07.11.2024 இன்று விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. பரிசுத்தநாதன் B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 வரை பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு . G.மணிசங்கர், B.A.B.L., அவர்கள் ஆஜராகி இருந்த நிலையில், வழக்கு விசாரணைக்கு வந்தபோது , வாதி ஆஜராக போதிய கால அவகாசம் அளித்தும் , வாதி ஆஜராகாத காரணத்தால் , இன்று இந்நீதிமன்றம் ஆழ்ந்த பரிசீலணைக்கு உட்பட்டு, கீழ்கண்டவாறு வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கு அ அட்டவணை சொத்தை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரம் கோரியும், வழக்கு ஆ அட்டவணை சொத்தைன பொறுத்து நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது வாதியை இந்நீதிமன்றத்திற்கு அழைத்தும் ஆஜராகாததாலும் , முந்தைய விசாரணையில் வாதியை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டும், இன்றைய வாய்தாவிலும் வாதி ஆஜராகாததாலும், போதிய கால அவகாசம் அளித்தும், வாதி ஆஜராகாததாலும், போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு, இவ்வழக்கு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) ப.ரிஸானா பர்வீன்,
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**